FWC

**வடமாகாணக் கல்வித் திணைக்களத்துடன் இணைந்து**
**தொண்டைமானாறு வெளிக்கள நிலையம் நடாத்தும்**
**தவணைப் பரீட்சை, மார்ச் - 2020**
**Conducted by Field Work Centre, Thondaimanaru**
**In Collaboration with Provincial Department of Education**
**Northern Province**
**Term Examination, March - 2020**

| தரம் :-13 (2020) | நாடகமும் அரங்கியலும் I | மூன்று மணித்தியாலம் 10 நிமிடம் |
|---|---|---|

## பகுதி I

❖ *1* **தொடக்கம் 40 வரையான வினாக்கள் ஒவ்வொன்றிற்கும் சரியானதும் பொருத்தமானதுமான விடையைத் தெரிவு செய்க.**

01. 'உண்மை நிலையினை புலனுணர்வுக்கு ஏற்றவகையில் அளிப்பதே கலை' எனக் குறிப்பிட்டவர்.
    1) அரிஸ்ரோட்டில் 2) ஹெகல் 3) எரிக் நியூட்டன்
    4) இராமதாஸ் முகர்ஜி 5) ஹொனிக்மன் ( )

02. கீழைத்தேய கலைக்கோட்பாட்டாளரான 'அரவிந்தர்' கலைபற்றி முன்வைத்த கருத்து யாது?
    1) இந்தியக்கலை பழிபாவமும் தன்னலமும் நிறைந்த உலகைவிட்டு தம்மை அப்பால் அழைத்துச் செல்லவல்லது.
    2) முனைப்பு பெற்ற உணர்ச்சிகளின் தன்னிச்சையான வெளிப்பாடு.
    3) தூய உள்ளுணர்வின் வெளிப்பாடே கலை.
    4) அழகை கண்டுபிடிப்பதும் அதை வெளிப்படுத்துவதும் கலை.
    5) உள் மனதில் பதிந்த படமே கலை. ( )

03. ஆற்றுகைக் கலைகளில் முதன்மை பெறுகின்ற மூன்று விடயங்கள்.
    1) ஆற்றுகை, வெளி, பார்ப்போர் 2) ஆற்றுவோர், பார்ப்போர், வெளி
    3) நடிகன், பார்ப்போன், ஆக்கம் 4) ஆற்றுகை, இசை, வெளி
    5) வெளி, ஒளி, காட்சி ( )

04. இசைக்கலை முதன்மை பெறுகின்ற நாடக வடிவங்கள்.
    1) ஒப்பேரா, இசைக்கச்சேரி, இசைநாடகம் 2) நடனம், ஒப்பேரா, கூத்து
    3) இசை நாடகம், ஒப்பேரா, கூத்து 4) தைநீராடல்
    5) சிறுவர் நாடகம், வில்லிசை ( )

05. நாடகத்தினை 'பிளே' Play என்றும் அழைப்பர். 'play' குறிப்பது.
    1) நடிப்பினை 2) நாடக எழுத்துருவினை 3) அரங்க விளையாட்டினை
    4) நாடக ஆற்றுகையை 5) மகிழ்வளிப்பினை ( )

06. 'ட்றமனன்' (Dramnoan) என்ற கிரேக்கச் சொல்லின் கருத்து.
    1) பார்க்கும் இடம் 2) நிகழ்கலை 3) ஆற்றப்படும் வெளி
    4) செய்து காட்டுதல் 5) நிகழ்த்தப்பட்டது ( )

07. நடிப்புத்தொடர்பாக ஓரளவு ஒத்த சிந்தனை கொண்ட நெறியாளர்கள்.
1) ஸ்ரனிஸ்வஸ்கி, பிரக்ட் 2) மேயஹோல்ட், பிரக்ட்
3) அன்ரன் செகோவ், பீற்றர்புறூக் 4) ஸ்ரனிஸ்லவஸ்கி, மேயஹோல்ட்
5) குறொட்டோவ்ஸ்கி, மெனிங்சன்பிரபு ( )

08. நாடகத்தயாரிப்புப் பணியை மேற்கொள்கின்ற "தொழில்முறை நாடகத்தயாரிப்பாளர்களின்" பிரதான நோக்கமாக இருப்பது.
1) சமூகமாற்ற சிந்தனை 2) கலைத்துவ ஆர்வம் 3) இலாப நோக்கம்
4) பரீட்சார்த்த சிந்தனை 5) நிறுவனத்தேவை ( )

09. கிரேக்கத்தில் 'தியோசிஸ்' என்னும் குழுவினரின் பணியாகக் காணப்பட்டது.
1) டயோனீசியஸ் வழிபாட்டை நடத்துவது 2) நாடகங்களுக்கு நிதி வழங்குவது
3) நடுவர்களாக தொழில்படுவது 4) கோரசை வழிநடத்துவது
5) இசை வழங்குவது ( )

10. 'தெஸ்பியன் வண்டில்' என்ற கலைச்சொல் குறிப்பது.
1) ரஜடி நாடகத்தினை 2) நாடக வரலாற்றுத் தொடர்ச்சியை
3) அரங்கப் பொறி ஒன்றினை 4) நாடகமொன்றின் பெயரை
5) தெஸ்பிசின் வரலாற்றை ( )

11. அரிஸ்ரோட்எல் கூறுகின்ற 'நிறை கதைப்பின்னலின்' இன்றியமையாத அம்சம்.
1) மோதுகை – செயல் 2) எதிர்திருப்பம் - தெளிவு 3) சம்பவம் - சொல்லாடல்
4) காட்சி – சம்பவங்கள் 5) பாடல் - இசை ( )

12. 'நாடகம் பழக்கவழக்கங்களைக் காட்டும் நிலைக்கண்ணாடி' என்று கூறியவயவர்.
1) இளம்பூரணர் 2) அபிநவகுப்தர் 3) நெல்சன் குட்மன்
4) அலடைஸ் நிக்கொல் 5) பேனாட்ஹோ ( )

13. வடமொழி நாடக மரபில் நிகழ்வுகளை இணைக்கின்ற சந்திகளில் "காரியம் என்னும் நோக்கம் நிறைவேறி நாடகம் நிறைவடைவதனைக் கூறும் சந்தி"
1) முக சந்தி 2) விமர்சக சந்தி 3) நிர்வஹன சந்தி
4) கர்ப்ப சந்தி 5) பிரதிமுக சந்தி ( )

14. நாட்டிய சாஸ்திரம் கூறும் அரங்கவெளியின் 'மாதிரி'யாக கொள்ளக்கூடிய 'கூத்தம்பலம்' காணப்படுகின்ற கோவில்.
1) கேரளா வடக்கு நாதர் கோவில் 2) தஞ்சைப்பெருங்கோவில்
3) மதுரை மீனாட்சி அம்மன் கோவில் 4) நெல்லண்டை பத்திரகாளியம்மன் கோவில்
5) கேரளா சனிஸ்வரன் கோவில் ( )

15. நாட்டியச ாஸ்திரம் கூறும் ஸ்தாயி பாவங்கள்
1) 4 2) 5 3) 8 4) 33 5) 108 ( )

16. நடிப்பு சார் பயிற்சிகளில் 'மறுதலையாகப் பாகமாடுதல்' என்பது.
1) விரும்பிய பாத்திரத்தினை ஏற்று நடிப்பது
2) ஏற்கனவே நடித்த பாகத்தில் இருந்து மாறி, அதன் எதிர்பாகத்தினை நடித்தல்.
3) எதிர்ப்பினை வெளிப்படுத்தும் பாத்திரமாக நடித்தல்.
4) குறித்த பாத்திரத்தின் பண்புகளை நிராகரித்து நடித்தல்.
5) பாத்திரத்தின் பின் சம்பவங்களை முதலில் நடித்தல். ( )

17. உலகப்புகழ்பெற்ற நடிகனாகிய 'சார்லி சப்ளினின்' நடிப்பு நுட்பமாக இருந்தது.
1) பாடல் 2) ஆடல் 3) ஊமம் 4) வித்தை 5) சொல்லாடல் ( )

18. "இந்திய நாடகம் சமயத்தொடர்புடையது. இதற்கான மூலவேர்களை இருக்கு வேதத்தில் காணலாம்" எனக் கூறியவர்.
1) கீத் 2) றிட்ஜ்வே 3) ஜோன் ஹறீசன்
4) பக்தவத்சல பாரதி 5) ஜோர்ஜ் தொம்சன் ( )

19. காவியபாணி நடிப்பு முறையின் அம்சம் அல்லாதது.
1) மோடிமைப்படுத்தப்பட்ட நடிப்புமுறை பயன்படுத்தப்படுதல்.
2) உரைநடையிலான சித்திரிப்பு முறை பயன்படுத்தப்படுதல்.
3) நடிப்புக்கு மருட்கை விளைவைத் தோற்றுவித்தல்.
4) செய்துகாட்டற் பண்பினைக் கொண்டிருத்தல்.
5) பார்ப்போரிடையே சித்திரிப்பு மனோபாவத்தைத் தூண்டுதல். ( )

20. நடிகர் ஒருவர் தனது உரையை 'தனக்குத்தானே பேசுவது' அரங்க மரபில் எவ்வாறு அழைக்கப்படுகின்றது.
1) புறச்சொல் 2) தனிமொழி 3) தன்னுரை
4) ஆகாயக்கிளர்த்தல் 5) அசரீரி ( )

21. இயற்பண்பு நாடகங்கள் தொடர்பான பொருத்தமற்ற கூற்று.
1) சமூகப்பிரச்சனைகளை ஆய்வு செய்து மேடைக்கு கொண்டுவந்தது.
2) வாழ்வையும், மனிதனையும் உள்ளவாறே மேடைக்கு கொண்டுவந்தது.
3) சாதாரண மனித வாழ்வின் துன்பங்களை வெளிப்படுத்தியது.
4) மறைக்கப்பட்ட போலிவாழ்வை வெளித்தெரிய வைத்தது.
5) தனி மனிதனுக்குப் பதிலாக 'சமூக மனிதனை' முதன்மைப்படுத்தியது. ( )

22. மத்திய கால ஐரோப்பாவில் நாடகத்தின் தோற்றத்திற்கு காரணமாய் அமைந்த சடங்கு.
1) தயோனீசியஸ் சடங்கு 2) ஈஸ்டர் சடங்கு 3) சம்போஷா சடங்கு
4) லெனேவிழாச்சடங்கு 5) கிறிஸ்மஸ் சடங்கு ( )

23. சடங்குப்பண்பு கொண்ட யப்பானிய நாடகம்.
1) கியோஜென் 2) கபுக்கி 3) ஒபேரா
4) நோ 5) பலே ( )

24. படச்சட்ட மேடையின் திரையின் முன்னே உள்ள பகுதி.
1) வளையி 2) சைக்ளோறாமா 3) களரி
4) புரோசீனியம் ஆர்க் 5) பக்கச்சிறகு ( )

25. 'தச ரூபகம்' என்னும் நூலை எழுதியவர்.
1) பரதர்  2) காளிதாசர்  3) பவபூதி
4) சூத்ரகர்  5) தனஞ்செயர்  (  )

26. மேடைக்குரிய 'திரை'யை 'எழினி' என வர்ணிக்கும் இலக்கியம்.
1) நாட்டிய சாஸ்திரம்  2) தொல்காப்பியம்  3) சிலப்பதிகாரம்
4) சீவகசிந்தாமணி  5) கவிதை இயல்  (  )

27. சாகுந்தலம் நாடகத்தில் அது மேடையேற்றப்படுவதற்கான நோக்கமாக அதன் பூர்வரங்கத்தில் குறிப்பிடப்படுவது.
1) பக்தி வெளிப்பாட்டிற்காக  2) மகிழ்வளித்தலுக்காக  3) அறிவுரை வழங்குவதற்காக
4) சமூக விழிப்புணர்வுக்காக  5) நகை உணர்வுக்காக  (  )

28. கோடை நாடகத்தில் "காலனித்துவ சிந்தனைக்கு" எதிரான பாத்திரங்கள்.
1) செல்லம், மாணிக்கம், காசி  2) சோமு, கமலி, முருகப்பு  3) பஞ்சையர், சோமு, காசி
4) செல்லம், முருகப்பு, கணேசு  5) கமலி, சோமு, விதானை  (  )

29. மகாகவியின் 'கோடை' நாடகத்தில் "இதுவோ கடுங்கோடை" எனப் பஞ்சயர் குறிப்பிடுவது.
1) வரட்சியை  2) வறுமையை  3) அந்நியர் ஆட்சியை
4) தொழிலின்மைய  5) சீதனமின்மையை  (  )

30. 'ஆற்றுகைக் கற்கைகள்' என்ற ஒரு கற்கை நெறிமுறையை உருவாக்கிய அமெரிக்க நெறியாளர்
1) பீற்றர் புறூக்  2) றிச்சாட் செக்னர்  3) அகஸ்தோ போல்
4) குறொட்டோவ்ஸ்கி  5) ஆட்டாவூட்  (  )

31. நடிகர் பிரதானமாக கொண்டிருக்க வேண்டியது.
1) பாடுந்திறன்  2) ஆடுந்திறன்  3) உள்ளார்ந்த நடிப்பாற்றல்
4) அழகான உடல்  5) சபைக்கூச்சமற்ற மனோபாங்கு  (  )

32. 'உந்தமன் பரதன்' என்ற புத்தாக்க கூத்து வடிவத்தின் ஆசிரியர்.
1) சி.மௌனகுரு  2) திரவியம் இராமச்சந்திரன்  3) அ.பாலதாஸ்
4) குழந்தை செபமாலை  5) இளய பத்மநாதன்  (  )

33. 'ரட்டயக்கும்' சடங்கு நிலை ஆற்றுகை தொடர்பான பொருத்தமற்ற கூற்று.
1) இலங்கையின் தென் மாகாணத்தில் நிகழ்த்தப்படுவது.
2) சுகப்பிரசவம் வேண்டி நிகழ்த்தப்படும்.
3) இதற்கு 'வீதிய' என்னும் பலிப்பீடம் அமைக்கப்படும்.
4) 'வெசமுனி' என்னும் பேய் பாத்திரம் இதில் முதன்மை பெறும்.
5) ஏழு மலட்டு இராணிகள் பாத்திரங்களாக வருவர்.  (  )

34. கூத்துப்பாரம்பரியத்தில் 'சலங்கை அணி விழா' எனக் கூறப்படுவது.
1) கூத்தின் முதல் மேடையேற்றம்
2) பணச் சேகரிப்பு விழா
3) ஆடல் பயிற்சிகளின் நிறைவில் மேற்கொள்ளப்படும் நிகழ்வு.
4) அரங்கேற்ற நேரத்தில் மேற்கொள்ளப்படும் கரணம்.
5) புதிய கூத்தர்களை வரவேற்கும் நிகழ்வு.  (  )

35. இசை நாடகத்தினை 'ஸ்பெஷல் நாடகம்' என அழைப்பதற்கான காரணம்.
   1) 'தனித்துவமான' வெவ்வேறு குழுக்களிலுள்ள நடிகர்கள் விசேட ஒழுங்கில் சேர்ந்து நடிப்பதனால்.
   2) அது ஒரு புதிய வகை நாடகமாக கருதப்பட்டமையினால்.
   3) விசேட நாட்களில் மட்டும் நிகழ்த்தப்பட்டமையினால்.
   4) விசேடமாக 'கர்னாடக சங்கீத' இசைமரபு அதில் இணைக்கப்பட்டமையினால்.
   5) அதிக நிதிச்செலவுடன் இந்தியாவில் இருந்து வருகைதரும் நடிகர்களுடன் நடிக்கப்பட்டதனால்
( )

36. மத்திய காலத்தின் 'குவாம் குவாறற்றீஸ்' என்ற ஆற்றுகை நிகழ்த்தப்பட்டது.
   1) ஈஸ்டர் விழாவில் 2) கிறிஸ்மஸ் விழாவில் 3) பெரிய வெள்ளியில்
   4) முட்டாள்கள் தினத்தில் 5) வேதசாட்சிகள் தினத்தில் ( )


37. பராக்கிரம நிரியல்ல அவர்களால் இலங்கையில் உருவாக்கப்பட்ட அரங்க நிறுவனம்.
   1) ரிகோன் கலை மையம்
   2) ஜன கரலிய
   3) விபுலரங்க சபா
   4) சிறுவர் இளையோருக்கான இலங்கை அரங்கு
   5) சிங்கள நாடக சபா ( )

38. இப்படத்திலுள்ள சிற்பம் வெளிப்படுத்தும் அரங்கமரபு



   1) கிரேக்கம்
   2) உரோம்
   3) மத்திய காலம்
   4) எலிசபெத் காலம்
   5) மறுமலர்ச்சிக் காலம்
( )

39. அருகில் காணப்படும் அரங்க வெளி



   1) கிரேக்க அரங்கு
   2) மத்தியகால பேரரங்கு
   3) உரோமைய அரங்கு
   4) ஜப்பானிய 'நோ' அரங்கு
   5) குளோப் அரங்கு
( )

40. இப்படத்தில் காணப்படும் 'அரங்க உருவு'டன் தொடர்புபடும் கூத்து மரபு.



   1) பொன்னர்சங்கர்
   2) காத்தவராஜன் கூத்து
   3) அர்ச்சுனன் தபசு
   4) வடபாங்கு
   5) காமன் கூத்து
( )

(1x40= 40 புள்ளிகள்)

## பகுதி II

❖ **உப பகுதி A யில் இருந்து இரண்டு வினாக்களையும், உப பகுதி B இலிருந்து இரண்டு வினாக்களையும் தெரிவு செய்து நான்கு வினாக்களுக்கு விடை எழுது.**

### உப பகுதி A

*01.* 1) ‘ஆற்றுகைக் கலைகள்’ என்பதனை உதாரணம் தந்து விளக்குக. (5 புள்ளிகள்)

2) ‘நாடகக் கலையை’ வேறு இரண்டு ஆற்றுகைக் கலைகளுடன் ஒப்பிட்டு வேறுபடுத்துக. (5 புள்ளிகள்)

3) ஆற்றுகைக்கலை ஒன்றில் ‘பார்ப்போரின்’ வகிபங்கினை விபரிக்குக. (5 புள்ளிகள்)

*02.* 1) ‘சடங்கு’ என்றால் என்ன என்பதனை விபரிக்குக? (5 புள்ளிகள்)

2) சடங்கு – நாடகமாகும் முறைமையை உமது நாட்டின் ஆய்வுகளில் இருந்து உதாரணங்களுடன் விபரிக்குக. (5 புள்ளிகள்)

3) சடங்குப்பின்புலத்தினை – நவீன நாடக முறைமைக்குப்பயன்படுத்திய ஐரோப்பிய, அல்லது ஈழத்து நெறியாளர் ஒருவரின் கோட்பாட்டினை விபரிக்குக. (5 புள்ளிகள்)

*03.* ‘படச்சட்ட அரங்கு’, ஈழத்துக் ‘கூத்துக்களரி’ என்பவற்றில் பின்வரும் விடயங்கள் தொடர்புபடும் முறைமையை விபரிக்குக.

1) ஆற்றுகை வெளி (5 புள்ளிகள்)

2) ஆற்றுகை முறைமை (5 புள்ளிகள்)

3) பார்ப்போரின துலங்கல் (5 புள்ளிகள்)

### உப பகுதி B

*04.* ஈழத்தின் யுத்த காலப்பகுதியில், மேற்கொள்ளப்பட்ட ‘அரங்கச் செயற்பாடுகளை’ விபரித்து அவற்றைத் தீர்மானித்த சமூக சூழமைவினை இனங்காட்டுக. (15 புள்ளிகள்)

*05.* ஒரு ‘ஆற்றுகை’ நடவடிக்கையையும் ‘நடிப்பு’ செயற்பாட்டினையும் ஒப்பிட்டு விபரிக்குக. (15 புள்ளிகள்)

*06.* பின்வருவனவற்றுள் விரும்பிய மூன்று விடயங்களுக்கு ‘சிறுகுறிப்பு’ எழுதுக?

1) சூரன் போர்.

2) பாஸ்கு நாடகம்

3) ‘அந்நியமாதல்’ கோட்பாடு

4) கதாசிஸ்

5) ரஸம்

வடமாகாணக் கல்வித் திணைக்களத்துடன் இணைந்து
தொண்டைமானாறு வெளிக்கள நிலையம் நடாத்தும்
தவணைப் பரீட்சை, மார்ச் - 2020
Conducted by Field Work Centre, Thondaimanaru
In Collaboration with Provincial Department of Education
Northern Province
Term Examination, March - 2020

FWC

| தரம் :-13 (2020) | நாடகமும் அரங்கியலும் II | மூன்று மணித்தியாலம் 10 நிமிடம் |
|---|---|---|

## பகுதி I

❖ **இப்பகுதியில் 1 தொடக்கம் 40 வரையான வினாக்கள் ஒவ்வொன்றிற்கும் சரியானதும் பொருத்தமானதுமான விடையைத் தெரிவு செய்க.**

01. 'கிரேக்க ரஜடியை' யதார்த்தத்தை நோக்கி கொண்டு வந்த நாடக ஆசிரியர்.
1) ஏஸ்கலஸ் 2) சோபோகிளிஸ் 3) யூரிப்பிடீஸ்
4) மெனான்டர் 5) அரிஸ்ரோபென்ஸ் ( )

02. 'சற்றயர்' நாடகம் பற்றிய பொருத்தமற்ற கூற்று
1) இது அங்கத சுவையுடையது
2) பாதி மனிதனும் பாதி குதிரையுமான பிராணி
3) கலகலப்பான சூழலுக்கு பார்ப்போரை இட்டுச் செல்லும் நோக்கமுடையது.
4) மூன்று ரஜடிகளுக்குப் பின்னர் நிகழ்த்தப்பட்டது.
5) கேலி கிண்டலுடன் அரசியல் நிலைகைள விமர்சித்தது. ( )

03. பள்ளு, குறவஞ்சி போன்ற ஆற்றுகை வடிவங்கள் உருவான காலம்
1) கி.பி 1800 – 1947 2) கி.பி 600 க்கு முன் 3) கி.பி 1300 – 1800
4) கி.மு 1ம் நூற்றாண்டு முன் 5) கி.பி 300 - 600 ( )

04. திருவெம்பாவையுடன் தொடர்புடைய சங்ககாலச்சடங்கு.
1) வேலன் வெறியாட்டு 2) கள வேள்வி 3) வேட்டுவ வரி
4) தைநீராடல் 5) குன்றக்குரவை ( )

05. இப்சன், பிரக்ட், சாமுவேல் பெக்கற், ஆகியோரின் நாடகங்கள் முறையே.
1) சமூகத்தின் தூண்கள், முப்பது செக்கனில் மூச்சு, ஒருபாவையின் வீடு.
2) பேய்கள், தாய், முப்பது செக்கனில் மூச்சு.
3) கொடோவுக்காக காத்திருத்தல், மக்களின் பகைவன், ஒருபாவையின் வீடு.
4) ஒத்தெல்லோ, வெண்கட்டி வட்டம், கலிலீயோ.
5) ஒருபாவையின் வீடு, மகாபாரதம். ( )

06. சமஸ்கிருத நாடகத்தின் சூத்திரதாரியை ஒத்தவராக சிங்கள 'நாடகம்' வில் வருபவர்.
1) பகுபூதையா 2) பபூன் 3) பொத்தேகுரு
4) கோணங்கி 5) வெசமுனி ( )

07. ஒடுக்கமுறையால் எழக்கூடிய தீவிரவாதத்தினை தனது காலத்திலேயே முன்வைத்து, பேராசிரியர் கணபதிப்பிள்ளை எழுதிய நாடகம்.
1) சுந்தரம் எங்கே 2) துரோகிகள் 3) கண்ணன் கூத்து
4) உடையார் மிடுக்கு 5) பிரிவுப்பாதை ( )

08. பின்வருவனவற்றில் பால்நிலை சமத்துவத்தினை வலியுறுத்தி ஈழத்தில் எழுந்த நாடகம்?
1) கடூழியம் 2) விழிப்பு 3) மழை 4) கூர் 5) சங்காரம் ( )

09. ஐரோப்பிய அரங்கில் சூழலியல் அரங்கை முதன்மைப்படுத்திய அரங்கவியலாளர்.
1) பீற்றர் புறூக் 2) குறொட்டோவ்ஸ்கி 3) றிச்சாட் செக்னர்
4) அன்ரோனியோ ஆர்த்தோ 5) ஒகஸ்தோபோல் ( )

10. தமிழ்க்கூத்துக்களில் பல பாத்திரங்கள் ஒன்றிணைந்து மேடையில் தோற்றுவது பின்வருமாறு அழைக்கப்படும்.
1) கோரஸ் 2) உலா 3) ஒய்யாரம் 4) சபை வரவு 5) கொலு ( )

11. மலையகத்தில் 'காமன் கூத்து' நிகழ்த்தப்படுகின்ற காலம்.
1) மார்கழி மாதம் 2) மாசி மாதம் 3) சித்திரை மாதம்
4) ஆடி மாதம் 5) தை மாதம் ( )

12. பின்வருவோரில் தமிழக கலைஞர்களுடன் இணைந்து இசை நாடகங்களில் நடித்த ஈழத்துக் கலைஞர்.
1) கிருஷ்ணாள்வார் 2) வி.வி.வைரமுத்து 3) செல்வரெட்டினம்
4) வி.ரி.செல்வராஜா 5) சின்னமணி ( )

13. இலங்கையின் தமிழ் நாடக வளர்ச்சிக்குப் பங்களிப்பு வழங்கிய நிறுவனங்களில் அறுபதுகளில் இருந்து தொடர்ச்சியாக இன்றுவரை இயங்கி வருகின்ற நிறுவனம்.
1) நாடக அரங்க கல்லூரி 2) செயல்திறன் அரங்க இயக்கம்
3) நடிகர் ஒன்றியம் 4) திருமறைக்கலாமன்றம்
5) அவைக்காற்றுகைக் கலைக்கழகம் ( )

14. இலங்கையில் கோலம் நாடக மரபு இன்றும் பயில் நிலையில் இருந்துவருகின்ற பிரதேசம்.
1) மேல் மாகாணம் 2) வடமத்திய மாகாணம்
3) மத்திய மாகாணம் 4) கரையோர தாழ்நாட்டுப் பிரதேசம்
5) வட மாகாணம் ( )

15. பின்வரும் அரங்க முறைமைகளில் 'நவவேட்கை வாத முறைமை' என்று கூற முடியாது.
1) மேயஹோல்ட்டின் 'உடற்பொறிமுறை அரங்கு'
2) குறொட்டோவ்ஸ்கியின் 'சடங்கு அரங்கு'
3) பீற்றர் புறூக்கின் 'வலிந்து தாக்கும் அரங்கு'
4) றிச்சாட் செக்னரின் 'சூழல் அரங்கு'
5) யூலியன் பெக் தம்பதிகள் 'வாழும் அரங்கு' ( )

16. பின்வருவனவற்றில் கூத்தின் வடிவத்துக்குள் சமகால சாதித்துவ வன்முறை பற்றிப்பேசிய நாடகம்.
1) கடூழியம் 2) மண்சுமந்த மேனியர் 3) கந்தன் கருணை
4) அற்றைத் திங்கள் 5) பொறுத்தது போதும் ( )

17. கண்ணன் கம்சனை வென்ற கதையை வெளிப்படுத்தும் சடங்கு.
1) யம சங்காரம் 2) கஜமுகாசுரன் போர் 3) சூரன்போர்
4) கம்சன் போர் 5) பாண்டுரங்கம் ( )

18. மத்திய கால 'மறைஞான நாடகங்கள்' எனப்படுபவை.
   1) கிறிஸ்தவ மக்களின் ஒழுக்கப்பண்புகளை குறிப்பனவாகும்.
   2) இயேசுவின் பிறப்பு இறப்பு உயிர்ப்பு என்பவற்றை குறிப்பனவாகும்.
   3) புனிதர்களின் அற்புதங்களை உள்ளடக்கிய கதைகளைக் கூறுவனவாகும்.
   4) திரு விவிலியத்திலுள்ள கதைகளை கூறுவனவாகும்.
   5) கிறிஸ்துவின் பாடுகளை விபரிப்பனவாகும். ( )

19. பாரம்பரிய கூத்தில் சபையோரின் பணியாக அமையாதது.
   1) பிற்பாட்டுப்பாடுதல் 2) பாத்திரங்களை அறிமுகம் செய்தல்
   3) பார்ப்போராக தொழில்படுதல் 4) நினைவூட்டல் செய்தல்
   5) சபைத்தருக்களைப்பாடுதல் ( )

20. பின்வரும் நாடகங்களில் மகாகவி காளிதாசனால் எழுதப்பட்ட நாடகம்.
   1) விக்கிரமோர்வசியம் 2) மிருச்சகடிகம் 3) மேகதூதம்
   4) மத்தவிலாசப்பிரகசனம் 5) சுவப்பன வாசவதத்தம் ( )

21. ஈழத்தின் முதல் 'சிறுவர் நாடக' ஆசிரியராக கருதப்படுபவர்.
   1) கவிஞர் கத்தவனம் 2) கலையரசு சொர்ணலிங்கம் 3) குழந்தை ம.சண்முகலிங்கம்
   4) சி.மௌனகுரு 5) சோமசுந்தரப்புலவர் ( )

22. பின்வருவனவற்றில் ஷேக்ஸ்பியரின் அவல நாடகங்களைக் கொண்ட தொகுதி.
   1) ஒத்தெல்லோ, கிங்லியர், ஹம்லட்
   2) மூன்றாம் றிச்சட், மக்பெத், ஹம்லட்
   3) யூலியசீசர், கிங்லியர், வெனிஸ் வணிகன்
   4) ஒதெல்லோ, புயல், 12ம் இரவு
   5) ஹம்லட், நீ விரும்பிய விதமே, இரண்டாம் றிச்சட். ( )

23. பின்வரும் நாடகங்களில் ஈழத்தில் எழுந்த 'கவிதை நாடகங்'களின் தொகுதி.
   1) கோடை, சங்காரம், அபசுரம்
   2) புதியதாரு வீடு, முற்றிற்று, கடூழியம்
   3) கோடை, கடூழியம், வேதாளம் சொன்ன கதை
   4) கர்வபங்கம், புதியதொரு வீடு, இருதுயரங்கள்.
   5) இருதுயரங்கள், கோடை, முற்றிற்று ( )

24. எந்தையும் தாயும் நாடகத்தில் 'ஒரே மாதிரியான பிரச்சனைகளை எதிர்கொள்ளும் பாத்திரங்கள்.
   1) செல்வரட்ணம், ஐயாத்துரை 2) கண்ணன், வசந்தி
   3) மகேஸ்வரி, ஐயாத்துரை 4) சங்கரப்பிள்ளை, செல்வரெட்ணம்
   5) சங்கரப்பிள்ளை வசந்தி ( )

25. *"அழிந்து போங்கள் எல்லோரும் கொலைகாரர்கள், துரோகிகள், நான் அவளைக் காப்பாற்றி இருக்கலாம்"* என்ற கிங்லியர் நாடகத்தில் வருகின்ற சொல்லாடலில் 'அவள்' என்ற பாத்திரம் குறிப்பது.
   1) ஆல்பனி 2) கார்டிலியா 3) எட்கார் 4) கோணறில் 5) றீகன் ( )

❖ **கோடை நாடகத்தில் வருகின்ற பின்வரும் உரையாடலை அடிப்படையாகக் கொண்டு 26, 27ம் வினாக்களுக்கு விடையளிக்குக.**

*''...உள்ளபடி உன் விருப்பம் அதுவென்றால் பிள்ளைக்கதுதான் பிரியமென்றால் நீ அந்தச் சள்ளப்பயலுக்கே செய்யன் சரிப்படுத்தப்பாரன்''*

26. மேற்படி உரையாடலுக்குரிய **'தன்மை'**ப் பாத்திரம்

1) மாணிக்கம் 2) விதானை 3) செல்லம் 4) காசி 5) பஞ்சயர் ( )

27. சள்ளப்பயலாக கருதப்படுபவர்.

1) சோமு 2) முருகப்பு 3) சாமி 4) காசி 5) பஞ்சையர் ( )

❖ *''அப்பனைக் கொன்றவனோடு எப்படி நீ கூடினாயோ தம்பி – அட தம்பி''* **என்ற இராவணேசன் நாடகப் பாடல்வரியைக் கொண்டு 28, 29ம் வினாக்களுக்கு விடை தருக?**

28. 'அப்பன்' என்ற பாத்திரமாக கருதப்படும் பாத்திரம்.

1) இராவணன் 2) இராமன் 3) வாலி 4) அனுமன் 5) விபீஷணன் ( )

29. இப்பாடல்வரிக்குரிய **'முன்னிலை'**ப் பாத்திரம்.

1) இராமன் 2) அனுமன் 3) கும்பகர்ணன் 4) இலட்சுமணன் 5) அங்கதன் ( )

30. இடிப்பஸ் நாடகத்தில், இடிப்பஸ் கண்களை குருடாக்கிய போது குழாத்தலைவன் ''அந்தக வாழ்விலும் மரணம் மேலானதே'' என்று கூறிய போது இடிப்பசின் பதிலாக அமைந்த கருத்து.

1) சகோதரரான தன்பிள்ளைகளைப் பார்க்க விரும்பாமை.
2) இறப்பின் பின் தந்தையையும் தாயையும் மேலுலகில் எதிர்கொள்ள விரும்பாமை.
3) தனக்கு தானே தண்டனை அளிக்க விரும்பியமை.
4) உலகை காண விரும்பாமை
5) தான் சாபமிடப்பட்டவன் என்பதால் ( )

31. சாகுந்தலம் நாடகத்தில் 'சுதாபன' பகுதியில் வருகின்ற கதாபாத்திரங்கள்.

1) துஷ்யந்தன் - விதூஷகன் 2) சகுந்தலை – அனுசூயை 3) செம்படவன் - துஷ்யந்தன்
4) துருவாசர் - பிரியம்வதை 5) சூத்திரதாரி - நடி ( )

32. பின்வருவனவற்றில் பேராசிரியர் சு.வித்தியானந்தனால் பதிப்பிக்கப்பட்ட கூத்துக்கள்.

1) வாலிவதை, இராவணேசன் 2) அலங்காரரூபன், இராமநாடகம்
3) மூவிராசாக்கள், கண்டி அரசன் 4) ஞான சௌந்தரி, அலங்கார ரூபன்
5) என்றிக் எம்பரதோர், சந்தியோகுமையோர். ( )

33. 'இராவணேசன் நாடகம் பற்றிய பின்வரும் கூற்றுக்களில் பிழையான கூற்றுக்கள்.

அ) இராவணேசன் முதன் முதலாக 1965 இல் எழுதப்பட்டது.
ஆ) இதில் வடமோடி, தென்மோடி வடிவங்கள் கலந்துள்ளன.
இ) இதனை முதன் முதலாக நெறியாள்கை செய்தவர். பேரா.சு.வித்தியானந்தன்
ஈ) இதனை எழுதியவர் சி.மௌனகுரு.
உ) இராம நாடகத்தின் ஒரு பகுதியையே இவ்வாறு நாடகமாக்கினர்.∵.

1) அ, ஆ 2) ஆ, உ 3) இ, ஈ 4) ஆ, இ 5) இ, உ ( )


34. யாழ்ப்பாண பல்கலைக்கழக 'வெறுவெளி அரங்க குழு' வெளியிட்ட நாடக அரங்கியலுக்கான சஞ்சிகை.

1) கட்டியம் 2) ஆற்றுகை 3) கூத்தரங்கம்
4) மெய்ப்பாடு 5) உடல் ( )

35. 'நாடக வழக்கு' என்ற நூலை எழுதியவர்.

1) குழந்தை ம.சண்முகலிங்கம் 2) தொல்காப்பியர் 3) பேராசிரியர்.சி.மௌனகுரு
4) ஏ.ரி.பொன்னுத்துரை 5) கலாநிதி காரை செ.சுந்தரம்பிள்ளை ( )

❖ **36 – 40 வரையான வினாக்களிற்கு கீழ்வரும் படத்தை அடிப்படையாகக் கொண்டு விடை தருக.**



அ




ஆ



இ



ஈ



உ

36. 'கோடை' நாடகத்தின் ஆசிரியர்.

1) அ 2) ஆ 3) இ 4) ஈ 5) உ ( )

37. படம் 'அ' இல் காணப்படும் நாடக ஆசிரியரின் நாடு.

1) இத்தாலி 2) உரோம் 3) பிரித்தானியா 4) கிரேக்கம் 5) இந்தியா ( )

38. 'சங்கிலி' வரலாற்று நாடகத்தின் ஆசிரியர்.

1) அ 2) ஆ 3) இ 4) ஈ 5) உ ( )

39. 'பொறுத்தது போதும்' நாடகத்தில் நடித்து சிறந்த நடிகனாக ஜனாதிபதி விருதினைப் பெற்றவர்.

1) அ 2) ஆ 3) இ 4) ஈ 5) உ ( )

40. தனது அரங்கை 'வறுமை அரங்கு' எனக் கூறியவர்.

1) அ 2) ஆ 3) இ 4) ஈ 5) உ ( )

(1x 40 = 40 புள்ளிகள்)

## பகுதி II

❖ **உப பகுதி A இல் இருந்து இரண்டு வினாக்களையும், உப பகுதி B இல் இருந்து இரண்டு வினாக்களையும் தெரிவு செய்து, நான்கு வினாக்களுக்கு விடை எழுதுக.**

## பகுதி A

*01.* *1)* இராவணேசன் நாடகத்தின் பிரதான மோதுகை யாது? *(3 புள்ளிகள்)*

*2)* இராவணேசன் நாடக பிரதான எதிர் நிலைப்பாத்திரங்கள் இரண்டின் பண்புகளை விபரிக்குக. *(5 புள்ளிகள்)*

*3)* இராவணேசன் நாடக கதை சொல்லில் 'கூத்து' வகிக்கும் பங்கினை விளக்குக. *(7 புள்ளிகள்)*

*02.* *1)* இடிப்பஸ் மன்னன் நாடகத்தின் பிரதான கதைக்கரு யாது? *(3 புள்ளிகள்)*

*2)* இடிப்பஸ் மன்னன் நாடகத்தில் வரும் 'இடிப்பஸ்' கதா பாத்திரத்தின் 'செயலியக்க' வளர்ச்சியை விபரிக்குக? *(5 புள்ளிகள்)*

*3)* 'இடிப்பஸ் மன்னன்' நாடக எழுத்துரு 'கிரேக்க ரஜடி'யின் எடுத்துக்காட்டாய் அமைவதனை விளக்குக. *(7 புள்ளிகள்)*

*03.* *1)* கோடை நாடகத்தில் வரும் பாத்திரங்களை எழுதுக? *(3 புள்ளிகள்)*

*2)* கோடை நாடகத்தில் வருகின்ற 'அந்திய ஏகாதிபத்தியத்திற்கு எதிரான கதாபாத்திரங்களை இனங்காட்டி அதில் ஒன்றின் பாத்திரப்பண்புகளை எழுதுக. *(5 புள்ளிகள்)*

*3)* கோடை நாடக எழுத்துருவினூடாக வெளிப்படும் 'நாதஸ்வர இசைக் கலையின் சிறப்புக்களை உதாரணங்களுடன் விளக்குக. *(7 புள்ளிகள்)*

## பகுதி B

*04.* 'லியர் மன்னன்' நாடகத்தினை ஆதாரமாகக் கொண்டு வில்லியம் ஷேக்ஸ்பியரின் நாடகவாக்கத்திறனை ஆராய்க?

*(15 புள்ளிகள்)*

*05.* "ஒரு காலகட்ட யாழ்ப்பாண சமூகத்தின், சமூக, பொருளாதார கலாசார போக்கினை பேராசிரியர் கணபதிப்பிள்ளையின் நாடகங்கள் வெளிப்படுத்துகின்றன" என்பார்கள். அவரது நாடகங்களை அடிப்படையாகக் கொண்டு இக்கூற்றினை விளக்குக.

*(15 புள்ளிகள்)*

*06.* பின்வருவனவற்றில் எவையேனும் மூன்றிற்கு 'சிறு குறிப்பு' எழுதுக?

*1)* அர்ச்சுனன் தபசு
*2)* கோலம்
*3)* பள்ளு
*4)* சிறுவர் நாடகம்
*5)* அற்புத நாடகங்கள்